# தமிழ்நாட்டுப் பிள்ளைகள் இன்றைக்கு ‘அப்பா’ என்றழைக்கும் மிகப்பெரும் தலைவர் நமது முதல்வர்!

## சட்டப்பேரவையில் அமைச்சர் பி.கே.சேகர்பாபு உரை...

9- ஆம் பக்கத் தொடர்ச்சி

இதுபோல், 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பள்ளிகள் இந்த 19ல் 6 பள்ளிகள் அடங்கும் என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்து இந்தக் கல்விப் பணிகளால் நிச்சயம் முதல்வர் அவர்களை வருங்காலத்தில் கல்வித் தந்தை என்று வட சென்னை மக்கள் போற்றுவார்கள் என்பதையும் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம் முதல்வர் அவர்கள் உழைக்கின்ற ஒவ்வொருவரையும் உயர்த்திட வேண்டுமென்று நினைப்பவர். தீவுத் திடல்தான் வட சென்னையின் வாயில். இதுவரையில் 43 தற்காலிகப் பொருட்காட்சிகள் நடந்திருக்கின்றன. இந்தப் பொருட்காட்சிகள் மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களும் அங்கு இடம் பெற்றிருக்கக்கூடும். வடசென்னை மக்களுடைய வாழ்வாதாரத்திற்கும் தொடர்ந்து எல்லா நாட்களுக்கும் அங்கே பொருட்காட்சி நடக்க வேண்டும் என்பதற்காக சுமார் 103 கோடி ரூபாய் செலவில் 20 அரங்குகள் கொண்ட ஒரு இலட்சத்து 60 ஆயிரம் சதுர அடியில் முதல்வர் அவர்கள் வட சென்னை வளர்ச்சித் திட்டத்தில் ஒரு மைல் கல்லாக இந்த நிரந்தரப் பொருட்காட்சியை முதல்வர் அவர்கள் அமைக்கவிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆம். இதன் மூலம் தீவுத் திடல் தொழில்முனைவோர்களின் சிரமங்களுக்கு தீர்வுத் திடலாக அமையும் என்பதை இந்த நேரத்திலே நான் பதிவு செய்யக் கடமைப்பட்டிருருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## ரூ.103 கோடியில் வடசென்னையில் நிரந்தரப் பொருட்காட்சி!

### வண்ணமீன் விற்பனை துறை

சொன்னதைச் செய்பவர், செய்வதைச் சொல்பவர். 2016 ஆம் ஆண்டு தேர்தலில் தன்னுடைய தொகுதியில் வண்ண மீன் விற்பனையாளர்கள் கூட்டாகச் சந்தித்து தங்கள் வாழ்வாதாரத்திற்கு இன்றைக்கு அந்நிய நாட்டினுடைய பொருளாதாரத்தை வெகுவாக ஈட்டுகின்ற ஒரு துறையாக வண்ண மீன்கள் விற்பனைத் துறை நிலவுகிறது. தங்களுக்கென்று ஒரு வாழ்வாதார இடம் வேண்டுமென்று அன்றைக்கு கோரிக்கையை வைத்தார்கள். இன்றைக்கு ஆட்சிக்கு வந்தவுடன் நிறைவேற்றிக் காட்டியிருக்கின்றார் மக்களின் முதல்வர் எங்களின் முதல்வர் தளபதி அவர்கள். அந்த வண்ண மீன்களுக்கு 3 ஏக்கர் 94 சென்ட் நிலப்பரப்பிலே ஒரு இலட்சத்து 25 ஆயிரம் சதுர அடியிலே சுமார் 188 கடைகளை 48 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இன்றைக்குக் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

## சென்னைப் பெருநகரத்தின் எழில்முகம் தென்சென்னை! தொழில் முகம் வடசென்னை!

இந்த ஆண்டு இறுதிக்குள் வண்ண மீன்கள் விற்பனை மையமும், தீவுத் திடலில் அமையவிருக்கின்ற நிரந்தர சுற்றுலாப் பொருட்காட்சியும் மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவரப்படும் என்பதை இந்த பேரவையில் அறிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இணைய வழித் திட்ட அனுமதி. கடந்த காலங்களில் இணைய வழித் திட்டம் அனுமதி என்பது இந்த ஆட்சி ஏற்பட்டபிறகு தொடங்கப்பட்ட ஒரு அனுமதி. 2022 ஆம் ஆண்டு முத்துசாமி அவர்கள் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தபோது இந்தத் திட்டத்தைக் கொண்டுவந்தார். 19 பொருட்கள் இந்த திட்டத்தோடு இணைய வேண்டும். 19 வகையான சான்றுகள் பெற வேண்டும். அவை அனைத்தையும் ஒருங்கிணைத்து இந்தத் திட்டத்தை மெருகேற்றியதன் பலனாக 2020 ஆம் ஆண்டு சுமார் 825 மனுக்கள் என்றிருந்த நிலை மாறி, தற்போது, 1,335 மனுக்கள் வரை ஓர் ஆண்டுக்கு விண்ணப்பதாரர்கள் தருகின்ற நல்லதொரு சூழ்நிலையை இந்த இணையதளம் வாயிலாக ஏற்படுத்தியிருக்கின்றோம்.

நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கிற திட்டங்களுக்கும், செயல்படுத்தப் போகிற திட்டங்களுக்கும் ஏற்கெனவே அறிவித்த அறிவிப்புகளோடு இணைத்து ஒருசில அறிவிப்புகளை உங்கள் முன்னால் அறிவிக்க விழைகிறேன்.

வாழ்வதற்கு வசதி செய்து தந்து, வசதியாக வாழவும் வைக்கும் காலம் மனிதநேயரின் பொற்காலம். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தாரக மந்திரத்தோடு வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்ளும், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் இந்த ஆண்டுக்கான அறிவிப்புகளை உங்களோடு பகிர்கிறேன்.

### அறிவிப்புகள்

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்**

60 ஆண்டுகளை நிறைவு செய்த சென்னை பாரதி பெண்கள் கல்லூரி மற்றும் அறிவியல் கல்லூரியில் சரித்திரம் படைத்துவரும் புதுமைப் பெண் திட்டத்தை அங்கேதான் முதல்வர் அவர்கள் தொடங்கினார்கள். அந்தக் கல்லூரிக்குத் தேவையான கலையரங்கம் மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளுக்காக 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புனரமைப்புப் பணி மற்றும் புதிய கல்லூரி அறைகளை ஏற்படுத்தித் தர முதல்வர் அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள் என்ற பெருமிதத்தை இங்கே பகிர்ந்துகொள்கிறேன்.

1. **சென்னை பாரதி பெண்கள் கல்லூரி கூடுதல் வசதிகளோடு ரூ.25 கோடியில் மேம்படுத்தப்படும்**

சென்னை பிரகாசம் சாலையில் 7.70 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள பாரதி பெண்கள் கல்லூரியில் புதிய ஆய்வகங்கள், கூடுதல் வகுப்பறைகள் அமைத்தல் மற்றும் வகுப்பறைகளைப் புதுப்பித்தல் உள்ளிட்ட மேம்பாட்டுப் பணிகள் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

2. **சென்னையில் 9 அரசுப் பள்ளிகள் ரூ. 25 கோடியில் மேம்படுத்தப்படும்.**

சென்னையில் 9 அரசுப் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள், ஆய்வகங்கள், போதிய இருக்கை வசதிகள், கணினி வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களுடன் ரூ.25 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

மங்களபுரம் நடுநிலைப் பள்ளி, வி.க நகர்,ஏகாங்கிபுரம் நடுநிலைப் பள்ளி, வி.க நகர்,இலட்சுமிபுரம் மேல்நிலைப் பள்ளி, புழல்,காசி பாலசுப்ரமணிய செட்டி அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, செங்குன்றம், ஜெய் கோபால் கரோடியா அரசினர் மேல்நிலைப்பள்ளி,மாதவரம், திருவள்ளுவர் நகர் தொடக்கப்பள்ளி, ஆர்.கே. நகர்ஜி, கே.எம். காலனி அரசுப் பள்ளி, கொளத்தூர்,ஜெய் கோபால் கரோடியா அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, விருகம்பாக்கம், அரசு மேல்நிலைப் பள்ளி, எம்.ஜி.ஆர். நகர், விருகம்பாக்கம்,

3. **சென்னையில் 6 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள் ரூ.5 கோடியில் மேம்படுத்தப்படும்**

சென்னையில் 6 ஆதிதிராவிடர் நலப் பள்ளிகள், போதிய இருக்கை வசதிகள், கணினி வசதிகள் மற்றும் விளையாட்டு உபகரணங்களுடன் ரூ. 5 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**பள்ளிகளின் பெயர்கள்**

ஆதி திராவிடர் நல அரசு பெண்கள் பள்ளி, கன்னிகாபுரம்,ஆதி திராவிடர் நல அரசு உயர்நிலைப்பள்ளி, புளியந்தோப்பு ஆதி திராவிடர் நல அரசு தொடக்கப்பள்ளி, புளியந்தோப்பு,ஆதி திராவிடர் நல அரசு தொடக்கப்பள்ளி, வெங்கடேசபுரம்,ஆதி திராவிடர் நல அரசு தொடக்கப்பள்ளி, செங்குன்றம்,ஆதி திராவிடர் நல அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, செங்குன்றம், சென்னையில் 15 முதல்வர் படைப்பகங்கள்ரூ. 40 கோடியில் அமைக்கப்படும்.

வடசென்னையில் 13 இடங்கள் மற்றும் பிற பகுதிகளில் 2 இடங்களிலும், அதிவேக இணையம், போட்டித்தேர்வுகளில் கலந்துகொள்ளும் மாணாக்கர்களுக்குத் தேவையான வசதிகள் கொண்ட கற்றல் மையங்கள் மற்றும் பகிர்ந்த பணியிட (CoWorking Space) வசதிகளைக் கொண்ட முதல்வர் படைப்பகங்கள், ரூ. 40 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

புதிய கட்டடங்கள் அமைத்தல் செரியன் நகர் , அயனாவரம், சுப்புராயன் தெரு, பக்தவத்சலம் பூங்கா, சண்முகம் தெரு, வெங்கடேசபுரம் , தண்டையார் பேட்டை நெடுஞ்சாலை, அம்பத்தூர் , மங்களபுரம், கோடம்பாக்கம், வால் டாக்ஸ் சாலை. ராட்லர்ஸ் தெரு , மேஜர் பாசு தெரு, சிந்தனை சிற்பி சிங்கரவேலர், எருக்கஞ்சேரி

5. **பிராட்வே பிரகாசம் சாலையில் அதிநவீன பொது நூலகம் ரூ.30 கோடியில் அமைக்கப்படும்**

சென்னை பிராட்வே பிரகாசம் சாலையில், 0.9 ஏக்கரில், மாணவர்கள் மற்றும் பொதுமக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில், மின்னணு வளங்கள், கற்றல் இடங்கள், போட்டித் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு தேவையான வசதிகள் மற்றும் சமூகப் பகுதிகளுடன், ஒரு சிறப்புமிக்க அதிநவீன பொது நூலகம் ரூ.30 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

6. **சென்னை மாநகரில் 5 அரங்குகள் மற்றும் மைதானங்கள் ரூ. 37 கோடியில் மேம்படுத்தப்படும்**

சென்னை மாநகரில் உள்ளூர் இளைஞர் திறன்களை வளர்ப்பதற்கும், சமூகத் தொடர்பு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுடன் கூடிய மையத்தை உருவாக்குவதற்கும் ஐந்து அரங்குகள் மற்றும் மைதானங்கள் ரூ.37 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

பன்னோக்கு விளையாட்டு மைதானம், பாடி, ஒருங்கிணைந்த விளையாட்டு மையம், ஷெனாய் நகர், பன்னோக்கு விளையாட்டு மையம், செரியன் நகர், அண்ணா நகர் சத்யசாய் நகரில் திறந்தவெளிப் பகுதி மேம்பாடு, நெமிலிச்சேரியில் ஒருங்கிணைந்த விளையாட்டு மையம்

## கொளத்தூர் தொகுதியில் முதல் ‘முதல்வர் படைப்பகம்’!

7. **வடசென்னையில் 4 இடங்களில் குளிர்சாதனப் பேருந்து நிறுத்தங்கள் முதன்முறையாக சென்னையில் ரூ.8 கோடியில் அமைக்கப்படும்**

வடசென்னையில் பெரம்பூர், இராயபுரம், கொளத்தூர், மற்றும் துறைமுகம் ஆகிய பகுதிகளில் குளிர்சாதன வசதி மற்றும் கழிப்பறை வசதிகளுடன் கூடிய பேருந்து நிறுத்தங்கள் ரூ.8 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

8. **சென்னையில் 7 பன்னோக்கு மையங்கள் ரூ.45 கோடியில், சைதாப்பேட்டை உட்பட அமைக்கப்படும்.**

சென்னையில், குளிர்சாதன அரங்கம், உணவுக்கூடம் மற்றும் வாகன நிறுத்துமிடம் ஆகிய வசதிகளுடன் ஏழு பன்னோக்கு மையங்கள் ரூ.45 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

இடங்கள் சத்தியமூர்த்தி சாலை, சேத்துப்பட்டு, சத்யமூர்த்தி சின்ன சேக்காடு தேவராஜ் நகர், மணலி, ஷேக் மேஸ்திரி தெரு, இராயபுரம், கக்கன்ஜி நகர், வியாசர்பாடி ,நாகிரெட்டி தோட்டம், கிண்டி, நொளம்பூர் தாலுகா அலுவலக சாலை, மதுரவாயல் ,பெருங்குடி

9. **சென்னையில் 6 அமுதம் அங்காடிகள் ரூ.22 கோடியில் உணவுத் துறை அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கேற்ப அமைக்கப்படும்**

சென்னையில் பெரியார் நகர், சைதாப்பேட்டை தாடண்டர் நகர், பல்லாவரம், சித்தாலப்பாக்கம், இராயபுரம் மற்றும் வில்லிவாக்கம் சிட்கோ நகர் ஆகிய ஆறு இடங்களில் அமுதம் அங்காடிகள், ரூ. 22 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

10.**சென்னை வண்டலூர் கீரப்பாக்கத்தில் ரூ.11 கோடியில் உணவுப் பொருள் கிடங்கு அமைக்கப்படும்**

சென்னை, வண்டலூர், கீரப்பாக்கத்தில், 5 ஏக்கர் பரப்பளவில், உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், உணவுப் பொருள் கிடங்கு ரூ.11 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

11.இராயபுரம், சஞ்சீவிராயன் பேட்டை அரசு மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் ரூ.6 கோடியில் அமைக்கப்படும்

சென்னை, இராயபுரம், சஞ்சீவிராயன் பேட்டை அரசு மகப்பேறு மருத்துவமனையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக, கூடுதல் கட்டடம் ரூ.6 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

12. **இராயபுரம், பனைமரத் தொட்டி அரசு மகப்பேறு மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் ரூ.4 கோடியில் அமைக்கப்படும்**

சென்னை, இராயபுரம், பனைமரத் தொட்டி அரசு மகப்பேறு மருத்துவமனையில் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் விதமாக, கூடுதல் கட்டடம் ரூ.4 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

13. **கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகம் ரூ.10 கோடியில் மேம்படுத்தப்படும்.**

கோயம்பேடு மொத்த விற்பனை அங்காடி வளாகத்தில் திடக்கழிவு பதப்படுத்தும் நிலையம் மற்றும் கட்டணமில்லா கழிவறைகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

14.**காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் உட்கட்டமைப்பு வசதிகள் நம்முடைய தா.மோ. அன்பரசன் அவர்கள் வேண்டுகோளுக்கிணங்க ரூ.21 கோடியில் மேம்படுத்தப்படும்**

காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியத்தில் அய்யப்பந்தாங்கல், பரணி புத்தூர், மௌலிவாக்கம், கெருகம்பாக்கம், கோவூர், கொளப்பாக்கம், தண்டலம் ஆகிய பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் ரூ.21 கோடி மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

15. **பல்லாவரம் சட்டப் பேரவைத் தொகுதி உறுப்பினர், கலைஞர் அவர்கள் பெயரை வைத்துக்கொண்டிருக்கின்ற அன்பிற்கினிய கருணாநிதி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று, சென்னை குரோம்பேட்டையில் ரூ.10 கோடியில் நடை மேம்பாலம் அமைக்கப்படும்**

சென்னை குரோம்பேட்டையில் எஸ்.டி.என்.பி. வைஷ்ணவ் கல்லூரி சந்திப்பில், மாணவ மாணவிகள் மற்றும் பொதுமக்கள் எளிதாக சாலையைக் கடக்கும் வகையில் ஜி.எஸ்.டி சாலையின் குறுக்கே ரூ.10 கோடி மதிப்பீட்டில் நகரும் படிக்கட்டுகளுடன் கூடிய புதிய நடை மேம்பாலம் அமைக்கப்படும்.

2025-2026 ஆம் ஆண்டிற்கு அறிவித்த அறிவிப்புகளின் எண்ணிக்கையைப் பார்த்தால், உங்களுக்கு 15 என்றுதான் தெரியும். ஆனால், அதில் மேற்கொள்ள விருக்கின்ற பணிகளின் எண்ணிக்கை 60 என்பதை இந்த மன்றத்தில் நான் பதிவு செய்கின்றேன். முந்தைய ஆட்சிக்காலத்தில் அறிவித்த அறிவிப்புகளை இந்த நான்கு ஆண்டுகால ஆட்சியில் அறிவித்த சதவிகிதத்தோடு ஒப்பிட்டுப் பார்த்தால், கடந்த ஆட்சிக் காலத்தில் அறிவித்த அறிவிப்புகள் 20 சதவிகிதம் என்றால், இந்த ஆட்சிக் காலத்தில் அறிவித்த அறிவிப்புகள் 80 சதவிகிதத்தைத் தாண்டும் என்பதை நான் இங்கே பதிவுசெய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எங்கள் முதல்வர் எதையும் தொட்டதில்லை, தொட்டதை முடிக்காமல் விட்டதில்லை. வளர்ச்சியின் உச்சத்தை எட்டாமல் திரும்பமாட்டார் எங்கள் முதல்வர். மக்கள் பணி என்றால், முன்னால் நிற்பவர். அதனால்தான் எப்போதும் எங்கள் முதல்வரோடு மக்கள் கைகோர்த்து நின்றுகொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

கல்லணை என்றால் கரிகாலன் பெயர் நினைவுக்கு வரும்; பெரிய கோயில் என்றால் இராஜராஜ சோழன் பெயர் நினைவுக்கு வரும்; நாயக்கர் மகால் என்றால் திருமலை நாயக்க மன்னன் பெயர் நினைவுக்கு வரும்; இன்றைய சென்னை பெருநகர் வளர்ச்சி என்றால், எங்கள் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரும், (மேசையைத் தட்டும் ஒலி) சென்னையின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் எங்கள் அன்புத் தலைவர் தளபதி அவர்களின் பெயரும் நினைவுக்கு வரும். (மேசையைத் தட்டும் ஒலி)

சமத்துவம் என்பது சமமாக நடத்துவதல்ல, சம வாய்ப்பை அனைவருக்கும் அளிப்பதுதான் சமத்துவம். அவருடைய திராவிடத் தடத்தில் நடைபோடும் எங்கள் முதல்வர், இன்று இது சாமானியர்களுக்காக நடத்தப்படும் சாமானியர்களின் ஆட்சி என்று முன்மொழிந்திருக்கின்றார். இந்த ஆட்சி, சாமானியர்களுக்காக நடத்தப்படும் சாமானியர்களின் ஆட்சி என்று பிரகடனப்படுத்தியிருக்கின்றார்.

‘ஃ’ என்பதுதானே தமிழின் ஆய்த எழுத்து; ‘ஃ’ என்பதுதான் தமிழின் ஆய்த எழுத்து. ஆனால், ‘ரூ’ என்கிற எழுத்தையும் ஆயுதமாக்கி ஒன்றியத்தை அலறவிட்டவர் எங்கள் முதல்வர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவைத் தலைவர் அவர்களே, உரிமைகள் கேட்பதில் முதல் ஆளாக இருப்பார்; உறையிலிருந்து வெளிவரும் வாளாக இருப்பார்; இன, மொழியைக் காப்பதில் தோளாக இருப்பார்; அடக்குமுறையை சூரசம்ஹாரம் செய்வதில் முருகன் கையில் இருக்கின்ற வேலாக இருப்பார்.

அன்று அப்பா என்று அழைத்துக் கொள்ளட்டுமா தலைவரே! என்றார் எங்கள் முதல்வர். ஆனால், இன்று தன்னுடைய அன்பால் தமிழகத்துப் பிள்ளைகள் அப்பா என்று அழைக்கின்ற மாபெரும் தலைவராகிவிட்டார் எங்கள் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) எம்மொழியே செம்மொழி! எதற்காக மும்மொழி! எம்மொழி செம்மொழி! எதற்காக மும்மொழி! என்று 5,000 கோடி ரூபாய் கொடுத்தாலும் இந்திக்கு வாசல் திறக்க முடியாது என்று அறைகூவல் விட்டவர் எங்கள் முதல்வர். (மேசையைத் தட்டும் ஒலி) அடக்க முடியாது என்று கர்ஜித்த மொழிக் காவலர் எங்கள் முதல்வர்.

எல்லா மொழிகளையும் நாங்கள் நேசிக்கின்றோம்; தேவைப்பட்டால் அனைத்து மொழிகளையுமே நாங்கள் வாசிக்கின்றோம். எல்லா மொழிகளையும் நேசிக்கின்றோம்; தேவைப்பட்டால் அனைத்து மொழிகளையும் வாசிக்கின்றோம். அதைத் திணிக்க நினைப்பது பிழையாகும்; அது தேன்கூட்டில் கை வைத்த நிலையாகும் என்று நாம் எச்சரிக்கக் கடமைப்பட்டிருக்கின்றோம்.

தமிழ்நாட்டின் தனித்தன்மையை பறைசாற்றியவர் எங்கள் முதல்வர். எங்கள் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அலுவலகம் இயங்கும் இடத்திற்கு தாளமுத்து நடராசன் என்று பெயரிட்டவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். தாளமுத்து நடராசன் என்று மொழிப்போர் தியாகிகளின் பெயர்களை எங்கள் துறைக்குச் சூட்டியவர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். ஆருயிர் தமிழைக் காக்க ஈருயிர் தந்த தியாக தீபங்கள் தாளமுத்து, நடராசன். தாய், தந்தையர் தந்த உயிரை தாய்மொழிக்காகத் தந்து களப்பலியானவர்கள் அவர்கள். தாளமுத்து நடராசன் மளிகை கட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர். தாளமுத்து நடராசன் நினைவுச்சின்னங்களை மூலக்கொத்தளத்தில் ஏற்படுத்தித் தந்தவர் எங்கள் முத்தமிழறிஞர், அவற்றைப் புதுப்பித்தவர் அன்பிற்கினிய இனிய தளபதி அவர்கள்.

### தாளமுத்து நடராஜனுக்கு சிலை!

இத்துடன் நின்றுவிடவில்லை. எங்கள் குழும அலுவலக வளாகத்தில் தாளமுத்து மற்றும் நடராசன் ஆகியோருக்கு சிலை வைக்க எங்கள் முதல்வர் எங்களுக்கு உத்தரவிட்டிருக்கின்றார். தியாகங்களை மறக்காத திராவிட மாடல் முதல்வர் வழியில் நடைபோடுகின்றது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம். பெருநகரக் கட்டடங்களும் உயர வேண்டும்; அதைக் கட்டிக் கொடுத்தவர்களும் உயர வேண்டும் என்பது எங்கள் முதல்வரின் பண்பு. இதுதான் எங்கள் முதல்வர் சென்னை வளர்ச்சியின் one line என்று கூறுகின்றார்.

சென்னையில் சாலைகள் பேசும் முதல்வரின் அருமையை! பாலங்கள் பேசும் முதல்வரின் பெருமையை! மழை நீர் வடிகால்கள் பேசும் முதல்வரின் சிறப்பை!

மெட்ரோ இரயில்கள் பேசும் முதல்வரின் சிந்தனையை! விழா அரங்கங்கள் பேசும் முதல்வரின் கலை நோக்கை! கல்வி நிலையங்கள் பேசும் முதல்வரின் தொலைநோக்கை! மருத்துவமனைகள் பேசும் முதல்வரின் கருணையை! பேருந்து நிலையங்கள் பேசும் முதல்வரின் கடமையை!

பூங்காக்கள் பேசும் முதல்வரின் அழகுணர்வை! நூலகங்கள் பேசும் முதல்வரின் அற உணர்வை! ஏரிகள் பேசும் முதல்வரின் ஈரத்தை! விளையாட்டு மைதானங்கள் பேசும் முதல்வரின் தீரத்தை! முதல்வர் படைப்பகங்கள் பேசும் முதல்வரின் ஊக்கத்தை! தோழி விடுதிகள் பேசும் முதல்வரின் அக்கறையை! வெற்றிகள் பேசும் முதல்வரின் உழைப்பை! அந்த உழைப்பை பேசும் முதல்வரின் தடையில்லா வெற்றிகளை! சரித்திரங்கள் பேசும் முதல்வரின் சாதனைகளை! இந்த சாதனைத் தொடரில் என்றென்றும் தமிழ்நாடு எங்கள் முதல்வரோடு நிற்கும்!

இறுதியாக ஓர் ஆட்சி திறம்பட தடையின்றி ஓடுகின்றது என்றால், அந்த ஆட்சியை நிருவகிக்கின்ற சுழலும் சக்கரமாக இருக்கின்றவர் முதல்வர்; அந்த முதல்வருக்குத் துணையாக இருப்பவர்கள் அமைச்சர்கள்; அந்த அமைச்சர்களுக்குத் துணையாக இருப்பவர்கள் அதிகாரிகள்; எங்கள் துறையைப் பொறுத்தவரையில் எங்கள் துறையினுடைய செயலாளர் திருமதி காகர்லா உஷா, அவர்களும், எங்கள் துறையின் முன்னாள் உறுப்பினர்செயலர் அன்சுல் மிஸ்ரா, அவர்களும், எங்கள் துறையின் இன்றைய உறுப்பினர்செயலர் பிரபாகரன், அவர்களும், நாங்கள் காலை 7.00 மணி என்றாலும் களத்திற்கு வருகிறார்கள்; மதியம் 2.00 மணி என்றாலும் களத்திற்கு வருகிறார்கள்; இரவு 10.00 மணி என்றாலும் களத்திற்கு வருகிறார்கள்; வெயில் என்றாலும், மழை என்றாலும் களத்திலே நின்று கொண்டிருக்கிறார்கள்.

அதற்காகத்தான் சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் 249 பணிகளை முதல்வர் அவர்கள் எங்களிடம் ஒப்படைத்திருக்கிறார். நிச்சயம் இவர்கள் துணையோடு, அதனை நிறைவேற்றி காட்டுவோம் என்பதை இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

இந்த ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும் பேருதவியாக இருந்த அரசுத் தலைமைச் செயலாளர் முருகானந்தம், அவர்களுக்கும், முதலமைச்சரின் செயலாளர் உமாநாத், அவர்களுக்கும், முதலமைச்சரின் செயலாளர் சண்முகம், அவர்களுக்கும், நிதித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் அன்பிற்கினிய உதயசந்திரன், அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் தினேஷ் அவர்களுக்கும் அதேபோல், முதலமைச்சர் அவர்களின் மற்றொரு செயலாளர் லட்சுமிபதி, இ.ஆ.ப., அவர்களுக்கும் இத்துறையை சார்ந்த, இந்த மானியக் கோரிக்கையை அளிக்க உதவியாக இருந்த அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மானியக் கோரிக்கையில் ஒட்டுமொத்தமாக அளித்த வெட்டுத் தீர்மானங்கள் ஏழு. ஏழும் ஒரே வகையான வெட்டுத் தீர்மானங்கள். அந்த வெட்டுத் தீர்மானங்கள், கோயம்பேடு பேருந்து நிலையம் குறித்தது. உறுப்பினர் மனோஜ் பாண்டியன் அவர்கள் அதுகுறித்து பேசியபோது, அதற்குண்டான பதிலையும் நான் சொல்லிவிட்டேன். ஆகவே, முழுமையாகக் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன. பேரவையில் இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் சென்னையில் இருக்கிற 22 சட்டமன்ற உறுப்பினர்கள் வைத்த கோரிக்கைகளையும் நிறைவேற்றித் தரப்படும் என்கிற உறுதியோடு தந்த வாய்ப்பிற்கு நன்றி தெரிவித்து, இந்த மானியக் கோரிக்கையை ஒருசேர அனைவரும் மேசையைத் தட்டி வரவேற்குமாறு அன்போடுக் கேட்டுக் கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு அமைச்சர் பி.கே. சேகர்பாபு பதிலுரை வழங்கினார்.